சிட்டிசன்....
CITIZEN...
கைக்கடிகாரங்கள்...
ஆடவர், மகளிர் அனைவருக்கும் ஏற்ற டிசைன்கள்.
மேசை, சுவர் மணிக்கூடுகள்
நேரடி இறக்குமதியாளர்கள்
சி. சின்னத்துரை அன் பிரதர்,
யாழ்ப்பாணம் - போன் 284



பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு

The EELANADU

மலர்: 20 ஆடி: 4 ஏ பா: 13 இதழ்: 159
யாழ்ப்பாணம் வியாழக் கிழமை 20-7-78



★ சுப்பர்
ஸ்ரார்... பாட்டா
தாரகைகளுள் ஒரு தாரகை
சுப்பர் ஸ்ரார்...
ஒவ்வொரு இளைஞனும் யுவதியும் அணியக்கூடியது. சுனடாவில் உருவாக்கப்பட்டது.
நகரில் கிடைக்குமிடம்...
சி. சின்னத்துரை
அன் பிரதர்
யாழ்ப்பாணம் - போன் 284
1978-7-20


நல்லூர் கூட்டணிக் கிளை காரியாலயத்தில்

# ஜி.ஜி. படத்தை அமிரும்

# செல்வா படத்தை சிவாவும்

# திறந்துவைத்தனர்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நல்லூர்க் கிளைக் காரியாலயத்தில் நேற்று அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம், அமரர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் ஆகிய இரு பெரும் தமிழ்த் தலைவர்களின் உருவப் படங்களும் திரைநீக்கஞ்செய்து வைக்கப்பட்டன.

அமரர் பொன்னம்பலத்தின் உருவப் படத்தைச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கமும், அமரர் செல்வநாயகத்தின் உருவப் படத்தைத் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரமும் திரைநீக்கம் செய்துவைத்தனர்.

படந் திறப்பு வைபவம், திரு. எம். சிவசிதம்பரம் தலைமையிலேயே நடைபெற்றது.

யாழ்ப்பாணத் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. வெ. யோகேஸ்வரன் மங்கள விளக்கேற்றிவைத்தார்.

## அமிர் பேச்சு

''இன்றைய அரசு ஒருபுறத்தில் ஒலிக்கப்பேசி வருகின்றது மறுபுறத்தில் தமிழ் பேசும் மக்களை சட்டங்கள் மூலம் அடிமைகளாக்கப் பார்க்கிறது இரண்டிற்கு மிடையில் நாம் நிதானமாக, அமைதியாக சுயஉணர்வுடன் செயல்படவேண்டிய வர்களாயிருக்கின்றோம்'' என்று இந்த விழாவில் உரைநிகழ்த்துகையில் திரு. அமிர்தலிங்கம் கூறினார்.

திரு. அ. அமிர்தலிங்கம் தொடர்ந்து உரையாற்றுகையில், அமரர் தந்தை செல்வாவும், அமரர் ஜி. ஜி. பொன்னம்பலமும் அவர்களது இறுதிக்காலத்தில் தமிழ்பேசும் மக்களிடையே சிதைந்து போயிருந்த ஒற்றுமையை கட்டியெழுப்பும் பணியில் ஈடுபட்டுவெற்றிகண்டார்கள். அவர்கள் கட்டிக்காத்த பெரு ஒற்றுமையையை குலைக்கதீய சக்திகள் இன்று முயன்றுவருகின்றனர். ஆனால், எங்கள் ஒற்றுமை என்ம் குலையாது என்பதை உறுதியாக கூறுகிறோம் என்றார்.

## ''சிவா'' காலத்தில் தமிழீழம்..

தமிழர்விடுதலைக்கூட்டணித் தலைவர்களான தந்தை செல்வா, ஜி. ஜி. பொன்னம்பலம், சௌ. தொண்டமான் ஆகியோரிடம் அமைந்துள்ள குணங்களை ஒருங்கே நிறையப் பெற்றவர் எமது தலைவர் சிவசிதம்பரம். இவருடைய தலைமையின் கீழ் தமிழ் மன்னன் சங்கிலியன் கடைசியாக ஆண்ட தமிழ் மண்ணிலே தமிழ் ஈழத்தை அமைத்தே தீருவோம் என்று குறிப்பிட்ட திரு. அமிர்தலிங்கம், ''நல்லூர்த்தொகுதி இளைஞர்கள் மிகவும் துடிப்புள்ளவர்கள், அவர்களது வீரத்துக்கும், விவேகத்துக்கும் நான் என்றும் தலைவணங்குகின்றேன். அண்மைக்காலங்களில் சிறைசென்றவர்களில் அனேகம் பேர் நல்லூர்த் தொகுதியைச் சேர்ந்தவர்கள் என்பதில் நான் பெருமையடைகின்றேன்.

## சிவா பேச்சு

தமிழர் விடுதலைக்கூட்டணியின் புதிய தலைவரும், நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் பேசுகையில் கூறியதா

[6-ம் பக்கம் பார்க்க]

## வண்ணை ஆனந்தன் கோரிக்கை

இந்திய சுதந்திரப்போரில் அண்ணல் காந்தி பலவகையான போராட்டங்களை அஹிம்சை வழியில் நடத்தி வெற்றி கண்டார். அந்தப் போராட்டங்களில் ஒன்று சுதேசப் பொருள் உற்பத்திப் போராட்டம். இதை இன்று தமிழ் பேசும் மக்கள் மத்தியில் உருவாக்கவேண்டும் என திரு. வண்ணை ஆனந்தன் நேற்று நல்லூர் கூட்டணிக் காரியாலய படத்திறப்பு விழாவில் தமிழ்த்தலைவர்களைக் கேட்டுக் கொண்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், இன்று நாம் தமிழ் ஈழத்தைப் பெறுவதற்கான வழிவகைகளை கோப்பாய் மகாநாட்டில் ஆராயவிருக்கின்றோம். தமிழ்மக்கள் தமிழ் ஈழத்தை அமைக்கும் போராட்டத்தில் சுதேச பொருள் உற்பத்திப் போராட்டம் முதன்மை பெறவேண்டும், அதற்கும் தீர்மானம் எடுக்கவேண்டும் என்றார்.

வங்கி ஊழியர் வேலை நிறுத்தம்:

## தொழிற்சங்கங்களின் கூட்டுச் சபையும் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

இன்று நடைபெறும் வங்கி ஊழியர் அடையாள வேலை நிறுத்தத்திற்கு வடபிரதேச தொழிற்சங்கங்களின் கூட்டுச் சபை பூரண ஆதரவுதெரிவித்துள்ளது.

மதியபோசன இடைவேளை நேரத்தில் அரசாங்க கூட்டுத்தாபன தனியார்துறைகளில் உள்ள சங்க அங்கத்தவர்களை தத்தம் வேலைத்தலங்களில் ஒருமணித்தியாலம் கூடிநின்று வேலைநிறுத்தத்திற்குஆதரவையும், தொழிலாளவர்க்கத்தின் ஒருமைப்பாட்டையும் தெரிவிக்குமாறு மேற்படி சபையின் செயலாளர் திரு. வே. பொன்னப்பலம் விடுத்துள்ள அறிக்கையில் கேட்டுள்ளனர்.

## தமிழ்நாடு தவில் வித்துவான்

(யாழ்ப்பாணம்)

தமிழ்நாட்டின் பிரபல தவில் வித்துவான் கலைமாமணி டி. ஜி. முத்துக்குமாரசாமி பிள்ளை இலங்கைவந்துள்ளார்.

தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கைவந்துள்ள திரு. முத்துக்குமாரசாமிபிள்ளை பிரபல தவில் வித்துவான் கைதடி பழனிமலை வீட்டில் இப்பொழுது தங்கியுள்ளார்.

## பேரவையில் இன்று

(கொழும்பு)

மாநகரசபைகளில் இடம் பெற்ற அதிகார துஷ்பிரயோகம், ஊழல் என்பன தொடர்பான குற்றச்சாட்டில் குற்றவாளிகளாகக் காணப்பட்ட முன்னாள் பொதுநிர்வாக உள்ளூராட்சி அமைச்சர் திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா, முன்னாள் கொழும்பு மேயர் ஜனாப் ஏ. எச். எம். பௌஸி, முன்னாள் பொதுநிர்வாக உள்ளூராட்சி பிரதி அமைச்சர் திரு. நீல் டி அல்விஸ் உட்பட 32 பேரின் குடியுரிமைகளை ரத்துச் செய்யும் சட்டமூலத்தை பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா இன்று தேசிய அரசுப்பேரவையில் சமர்ப்பிப்பார்; இன்று பிற்பகல் 2 மணிக்கு பேரவை கூடுகிறது. (ம-இ)

சட்டமா அதிபர், பொலிஸ்மா அதிபருக்கெதிராக

# 22 இளைஞர்கள் மானநஷ்ட வழக்குத் தொடர்வர்

(கொழும்பு)

அண்மையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாகச் சுவரொட்டி மூலம் விளம்பரப்படுத்தித் தேடுதல் நடத்திய 33 தமிழ் இளைஞர்களில், 22 இளைஞர்கள் சட்டமா அதிபருக்கும், பொலிஸ் மா அதிபருக்கும் எதிராக மானநஷ்ட வழக்குத் தொடரவுள்ளனர்.

பொலிசாரின் இந்த நடவடிக்கையினால் தமது கௌரவம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே தமக்கு ஒரு லட்சம் ரூபா நஷ்டஈடு வழங்கப்படவேண்டுமென்றும் கோரி, இவர்கள் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளனர்.

இது தொடர்பாகப் பொலிஸ் மா அதிபர் திரு. அன செனவிரத்னவுக்கும், சட்டமா அதிபர் திரு. சிவா பசுபதிக்கும் இந்த இளைஞர்கள் கடிதம் எழுதியுள்ளனர்.

காசி ஆனந்தன், வண்ணை ஆனந்தன், மாவை சேனாதிராசா உட்பட 22 இளைஞர்களே இவ்வழக்கைத் தாக்கல் செய்யவுள்ளனர்.

[illegible]ப்பிடம், விலாசம் ஆகிய சகல விபரங்களும் தெரிந்திருந்தும், தம்மை அவமானப்படுத்தும் நோக்குடன் தமது புகைப்படங்களைச் சுவரொட்டியில் வெளியிட்டதாகச் சில இளைஞர்களும், அரசாங்கத் திணைக்களங்களிலும், கூட்டுத்தாபனங்களிலும் தாம் பணிபுரிந்த வேளையில் தமது படங்களைச் சுவரொட்டியில் வெளியிட்டுத் தமக்கு அவமானம் ஏற்படுத்தியுள்ளதாகச் சில இளைஞர்களும் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாகத் தெரிகிறது. (ம-இ)


புதிய டிசைன்களில்
இறக்குமதிசெய்யப்பட்ட
CITIZEN
கைக்கடிகாரங்கள் கிடைக்குமிடம்:
நா. சாம்பசிவம் அன் கோ.
T. P. 454. யாழ்ப்பாணம். 9843

## வரி விளம்பரம்

### தேவை

யாழ். மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள பால் விநியோக நிலையம் ஒன்றுக்கு சயிக்கிள்மூலம் பால் விநியோகம் செய்யக் கூடிய ஒருவர் தேவை. கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல: 9845, C/o, ஈழநாடு, யாழ்ப்பாணம். 9845

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

சுழிபுரம்என்னும்இடத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சரவணமுத்து என்பவரின் மரணசாதனமில்லாத மரணச் சொத்தினதும் உடைமைப் பொருட்களினதும் விடயத்தில்.

மரணமெய்தியவா

இல. T,371

சுழிபுரம் சரவணமுத்து கைம்பெண் பரிபூரணம்.

மனுதார்

எதிராக

1. சரவணமுத்து நாகேந்திரராசா
2. சரவணமுத்து மகேந்திரராசா.
3. சரவணமுத்து புவனேந்திரராசா.

எதிராளிகள்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப்பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1978-ம் ஆண்டு ஆடி மாதம் 21-ந் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணமிருப்பின் காட்டுமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1978-ம் ஆண்டு ஆனி மாதம் 6-ந் திகதி.

மன்றின் ஆணைப்படி
**ஆர். செகராஜசிங்கம்,**
பதிவாளர்.

என்னால் வரையப்பட்டது ஒப்பம்
**தா. சங்கரப்பிள்ளை,**
மனுதாரின் சட்டத்தரணி.
9844


தாயகம் திரும்பு வோருக்கு

## தலைமன்னாரில் இப்படியும் ஒரு 'சோதனை!'

(நெல்லியடி)

சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின்கீழ் தாயகம் திரும்பும் பிரயாணிகள், சுங்கத்திணைக்களத்திற்கு வழங்கவேண்டிய 'பிரயாணிகள் பொதிகள் பற்றிய உறுதியுரை'விண்ணப்பப் படிவம், தலைமன்னார் இறங்கு துறையில் 2 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாக பிரயாணிகள் புகார் தெரிவிக்கின்றனர்.

மேற்படி படிவங்கள் சுங்கத்திணைக்களத்தினரால் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன. ஒருசிலர் அதைப்பெற்று பின்னர் கொள்ளை விலைக்கு விற்பனைசெய்து வருகின்றார்களாம். விஷயம் புரியாத அப்பாவிப் பிரயாணிகள், 2 ரூபா கொடுத்து படிவத்தைப் பெற்றுக்கொள்கின்றார்கள்.

## பன்னாலைமாணவர் கல்விச் சுற்றுலா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை பன்னாலை சேர் கனகசபை வித்தியாசாலை மாணவ, மாணவியர் கல்விச் சுற்றுலா ஒன்றினை யாழ்.குடாநாட்டில் மேற்கொண்டனர்.

இவர்கள் அச்சுவேலி கைத்தொழில் பேட்டை, பலாலி விமான நிலையம், யாழ். கோட்டை, மில்க்வைற்தொழிலகம், 'ஈழநாடு' அலுவலகம், காரைநகர் சீநோர் முதலான இடங்களைப் பார்வையிட்டனர்.

இவர்களை அதிபர் திரு. பொ. செல்லத்துரை, ஆசிரியர்கள் திரு. அ. பேரம்பலம். திரு. க. கந்தையா, திருமதி இ. சற்குணம், செல்வி ஏ. சண்முகம், செல்வி எம். ஸி. ஜூலியானு ஆகியோர் மேற்படி இடங்களைப் பார்வையிட அழைத்துச் சென்றனர். (உ)


## யாழ்ப்பாண மாநகரசபை கேள்வி அறிவித்தல்

நல்லூர் கந்தசுவாமி கோவில் திருவிழாக்காலத் தற்காலிக சந்தையில் கடைகள் அமைப்பதற்காகிய காணித் துண்டுகளை வாடகைக்குக் கொடுப்பதற்கு 28-7-78 வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணி வரை அரக்கு முத்திரையிட்ட கேள்விகள் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விகள் அன்று பிற்பகல் 2-30 மணிக்குத் திறக்கப்படும்.

கேள்விப்பத்திரத்தின் பெறுமதியாக ரூ. 3/-யும் மீளளிக்கப்படத்தக்க வைப்புப் பணமாக ரூபா 25/-யும் செலுத்தியதன்பேரில் கேள்விப்பத்திரங்களை 27-7-78-ந் திகதி பிற்பகல் 3-00 மணி வரை மாநகர அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்வி சம்பந்தப்பட்ட நிபந்தனைகள் மற்றும் தேவையான விபரங்கள் அனைத்தையும் மாநகரசபையில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**க. சிவஞானம்'**
ஆணையாளர்,
மாநகரகசபை,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
18-7-78. 9851


ஆசிரியருக்குக் கடிதம்

## பரீட்சைக்கு சாதாரண நோக்குநர்

பட்டதாரி ஆசிரியர்களல்லாத ஏனைய ஆசிரியர்களுக்கு ஒரு வேண்டுகோள். எதிர் வரும் கா.பொ. த. ப(சா/த) பரீட்சையில் சாதாரண நோக்குநர்களாக கடமையாற்ற ஒப்புக் கொள்ளாதீர்கள். உங்களிலே எவருமே மேற்பார்வையாளராகக் கடமையாற்ற லாயக்கற்றவர்களாககருதப்பட்டிருக்கிறீர்கள். உங்களுடைய நேர்மை, நாணயம். திறமையின்மைமீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. முன்னர் உங்களில் பலர் இந்தப் பொறுப்பைஏற்று செய்த சேவைக்கு நன்றி இவ்வளவுதான். ஆகவே ஆசிரியர்கள் பிச்சைக்காரர்கள் என்று பிறர் தூற்ற இடமளிக்காதீர்கள். 'பிறைவேற் ரியூஷன்' கொடுக்கிற பல ஆசிரியர்கள் கையில் பரீட்சையை ஒப்படைக்கட்டும். பரீட்சையும் உருப்படட்டும்.

அதிபர்கள், விசேட பதவி வகிப்பவர்கள், பட்டதாரிகள் மாட்டோமென்று நிராகரித்த கஷ்டமான பரீட்சை ஸ்தானங்களுக்கு தராதரம்குறைந்தவர்கள் எனக்கருதப்படும்சிலர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அதை ஏற்றவர்களை என்னவென்று சொல்லி அழைப்பது?

இ. மகாதேவா
திருநெல்வேலி.

## "சேவையில் மேலானவர்"

(சித்தன்கேணி)

"ஆசிரியர் சிவகுரு, ஆசிரியர்களுக்குரிய சகல அம்சங்களும் பெற்றவர். கற்பிக்கும் ஆற்றலும் பரந்த அறிவுமுடைய இவர், மேல் வகுப்புகளில் சமயம் தமிழ் முதலான பாடங்களை மாணவர்களுக்கு ஏற்றமுறையில் திறமையாகப் படிப்பித்தவர். கற்பிக்கும் ஆற்றலினால் மாணவர்களைத் தன்வசம் ஈர்த்துக் கொண்டவர் இவர்.

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு கனிஷ்ட மகாவித்தியாலயத்தில் ஆசிரிய சேவை செய்து ஓய்வுபெறும் ஆசிரியர் திரு. நா. சிவகுருவுக்கு மாணவர்கள் சேவைநலம் பாராட்டு விழா நடத்திய போது சொற்பொழிவாற்றிய பண்டிதை திருமதிஅமுதவல்லி பரமராஜா மேற்கண்டவாறு கூறினார்.

செல்வி பத்மாவதி (வலுப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற விழாவைஅதிபர் திரு. வே.தம்பையா மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார் அதிபர் திரு.வே. தம்பையா பேசும்போது;

ஆசிரியர் திரு. சிவகுரு தன்னலம் கருதாது சேவை செய்தவர். கற்பிப்பதில் திறமையும் நிர்வாகத் திறமையும் நிறையப் பெற்ற இவர் இப்பாடசாலையின் பலதரப்பட்ட வளர்ச்சியிலும் முன்னின்று உழைத்தவர் என்றார்,

ஆசிரியர் திரு. க. வேலாயுதம், செல்வி சுசீலா கந்தையா, செல்வி கமலேஸ்வவரி, செல்வி ஜெயசாந்தி முதலான பலரும் பேசினர்.

நாடகம், நடனம், பாட்டு முதலான கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (உ)


## மரண அறிவித்தல்

### திருமதி யோசேப் அருளம்மா (தங்கரட்டினம்)

(உத்தரவு பெற்ற பங்கீட்டு வியாபாரி)

காலம்சென்ற யோண் யோசேப்பின் அன்பு மனைவி அருளம்மா காலமானார். இவர் அலோசியஸ், அல்வின், தங்கம்,மலர்,ராணி,அஞ்சாஆகியோரின்அன்புத்தாயாரும்: லீனப்பு மனவற்பிள்ளையின் அன்புச் சகோதரனுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று (20-7-78)வியாழக்கிழமை பிற்பகல்4-30 மணிக்குநல்லடக்கத்திற்காக கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு 287, பாங்சால் வீதியிலிருந்து எடுத்துச் செல்லப்படும். 9852


# செய்திச் சுருக்கம்

### 'அமிரை' சந்திப்பர்

(நெல்லியடி)

எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்தை கமத்தொழில் விஸ்தரிப்பு உத்தியோகத்தர்கள் அவரது அலுவலகத்தில் சந்தித்து உரையாடவுள்ளார்கள். சிங்களமொழியில் தேர்ச்சிபெறாத உத்தியோகத்தர்கள் விரைவில் பதவி நீக்கம் செய்யப்படவுள்ளதை தடுத்துநிறுத்துமாறு இவ்வுத்தியோகத்தர்கள் கோருவர். சிங்களமொழியில் தேர்ச்சி பெற அவகாசம் பெற்றுத்தருமாறும் எதிர்க்கட்சித்தலைவரிடம் கோரப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

### மதிப்பீடு

(கொழும்பு)

வேலையற்றவர்களுக்கு அரசு வழங்கும் 50 ரூபா அலவன்சைப்பெற 7 லட்சத்து 50,000 பேர் தகுதியுடையவர்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

### மா இறக்குமதி துரிதம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை துறைமுகத்திற்கு வந்துள்ள கப்பலிலிருந்து மா இறக்கும் வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. ஆர்ஜன்டீனாவிலிருந்து 20 ஆயிரம் அந்தர் மாவை ஏற்றிக்கொண்டு 'சீ. ஈகிள்' என்ற இக்கப்பல் வந்துள்ளது.

### "நடிப்புத்துறையில் ஒரு சாதனையாளர்"

(நாவலப்பிட்டி)

"தான் [illegible]ற்கும் பாத்திரமாகவே எவன் மாறிவிடுகின்றானோ, அவனேசிறந்தநடிகன். நவரசமன்னன்விஜயேந்திரன், தான் ஏற்கும் பாத்திரமாகவே மாறிவிடக்கூடிய சிறந்த நடிகர். ஒரு முக்கால் மணிநேரத்தில்ஒன்பதுவிதமானரசங்களை ஏற்று ஒன்பது பாத்திரங்களை தாம் ஒருவரே ஏற்று நடிக்கும் விஜயேந்திரனின் தனித்துவநடிப்பாற்றல் மெச்சத்தக்கது.

திரு. விஜயேந்திரன் ஈழத்து நடிப்புத்துறையில் ஒருசாதனையாளர் என்பதனை நாம் முற்றாக உணரக்கூடியதாகவிருக்கிறது" என்று நவரசமன்னன் விஜயேந்திரனின் நவரசநாடகம் 315வது மேடையாக நாவலப்பிட்டி கதிரேசன்கல்லூரியில் கடந்தவாரம்நடைபெற்ற போது மேற்படி கல்லூரி அதிபர் திரு. ஆறுமுகம் தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

### "ஒத்துழைப்பு நல்குக"

(ஹேவாஹெட்ட)

"அரசின் போக்கைப்பற்றி விமர்சனம் செய்யும் மக்கள் அதன் அபிவிருத்தித் திட்டங்களுக்கும் தமது ஒத்துழைப்பை அளிக்கவேண்டும்" என்று தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. டி. பி. விஜயதுங்க உடுநுவரதொகுதியில் நடைபெற்ற வைபவம்ஒன்றில் பேசுகையில் கூறினர்.

### புதிய சங்கம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் உள்ள தென்னை உற்பத்தியாளரின் நலன் கருதியும் இப்பகுதியில் இதனை ஊக்குவிக்கவும் மட்டக்களப்பு மாவட்ட தென்னைப் பயிர்ச்செய்கையாளர் சங்கம் என்ற புதிய சங்கம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

### கொள்ளையர் கைது

(கொழும்பு)

பயங்கரக் குற்றங்கள் பல தொடர்பாக பொலிசாரிடம் சிக்காது தலைமறைவாக இருந்து வந்த பிசேலால், நவலியன், திலகே என்னும் கொள்ளைக்கூட்டத் தலைவர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்,

### ஏற்பாடு

(கொழும்பு)

ஆடிவேல் விழாவை முன்னிட்டு கொழும்பு இந்து சங்க அப்பர் அருள்நெறி மன்றத்தினர் 24 மணி நேரமும் பஜனை நடாத்த ஏற்பாடு செய்துள்ளனர்.

### நிபந்தனை, கட்டுப்பாடு

(கொழும்பு)

வெளிநாட்டிலிருந்து ஜவுளிகளை இறக்குமதி செய்யும் வர்த்தகர்களுக்கு அரசாங்கம் இனிமேல் கடும் நிபந்தனைகளையும் கட்டுப்பாடுகளையும் விதிக்கும் என்று வர்த்தக அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி கூறியுள்ளார்.

## நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபையின் 28வது ஆண்டுவிழாவின்பின் திரு. சி. அருச்சுனன் தலைமையில்இடம் பெற்ற பொதுநிர்வாகசபை உறுப்பினர்கள் தெரிவின் விபரம் வருமாறு:

தலைவர் திரு. வே. மார்க்கண்டு, உபதலைவர்கள்: திரு. க. கிருஷ்ணராசா, திரு. வே. தம்பிராசா, திரு. செ. அரியதுரை, செயலாளர்: திரு. ப. ஜீவானந்தம், நிர்வாகசெயலாளர்: திரு.எஸ். தணிகாசலம், பொருளாளர்: திரு. ஐ. மாசிலாமணி. கணக்குப்பரிசோதகர்: திரு. எஸ். போல். 9பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது. (உ)

## காங்கேசனில் மரம்நடும் இயக்கம்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் இம்மாதம் 22ம் திகதி மரம் நாட்டு விழா கொண்டாடப்பட இருக்கிறது.

தொழிற்சாலை சேமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் பகுதியினால் சேமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. அன்ரன் அண்ணாசாமிப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இம்மரம்நாட்டு இயக்கத்தில் தொழிற்சாலைவளவு குடியிருப்புப்பகுதி சுற்றுப்புறங்கள் ஆகியவற்றில் பல்வேறு விதமான மரங்கள் நாட்டப்படவுள்ளன. (உ)

ஈழநாடு
The Eelanaadu

## இ. போ. சபை பிராந்திய வேலைத்தலங்கள்

வெளியூர்களிலுள்ள பஸ் டிப்போக்களின் பஸ்களைப் பழுது பார்க்கவும் அவற்றைப் பராமரிக்கவும் பிரதேச வேலைத்தலங்கள் விரைவில் அமைக்கப்படவிருக்கின்றன என்று இலங்கை மத்திய போக்குவரத்துச்சபையின் தலைவர் திரு. விமல் பிரேமரத்தின தெரிவித்திருக்கிறார். எப்பொழுதே இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவேண்டும். இப்பொழுது புதிய அமைப்பின்கீழாவது இந்த ஏற்பாட்டைச் செய்ய முன்வந்ததற்காகப் போக்குவரத்துச்சபையைப் பாராட்டவேண்டும்.

பஸ்களில் பெரிய பழுது ஏற்பட்டால் இப்பொழுது அவை கொழும்புக்குத்தான் திருத்துவதற்காகக் கொண்டுசெல்லப்படுகின்றன. பஸ்கள் பழுதடைந்ததும் சில வாரங்கள் சில சமயங்களில் மாதக்கணக்கிலும் டிப்போக்களில் கிடப்பில் போடப்பட்டுவிடுகின்றன. இதன்பின்னர் கொழும்புடன் தொடர்பு கொண்டு வழமையான கடிதப் போக்குவரத்துக்கள் நடந்து உரிய அனுமதி கிடைத்தபின் அவை கொழும்பு போய்ச் சேருகின்றன. அதன்பின் அங்கும் அவை சிறிதுகாலம் கிடப்பில் கிடந்து மீண்டும் வீதியில் சேவைக்கு விடப்படுவதற்குள் எவ்வளவு காலம் பிடிக்குமென்று சொல்ல முடியாது.

யாழ்ப்பாணத்திலிருந்து பழுதடையும் பஸ்கள் கொழும்புக்கு அனுப்பப்பட்டு திருத்தம் செய்து வருவதால் பெருமளவு செலவேற்படுவது ஒருபுறமிருக்க வீண் காலதாமதமும் ஏற்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் இப்போது மோட்டார் வாகனங்களைப் பழுது பார்த்து புதிய வாகனங்கள் போல திருத்தம் செய்துகொடுக்கும் கராஜுகள் வீதிக்கு இரண்டு மூன்று என்று தினமும் அதிகரித்து வருகின்றன. கடைச்சல் தொழிற்சாலைகளும், கடைச்சல் தொழில் பழகுபவர்களும் கூட அதிகரித்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல இலங்கையில் பல இடங்களிலும் மோட்டார் இயந்திரவியலிலும் மற்றும் கடைச்சல் தொழிலிலும் பலர் நன்கு பயிற்சி பெற்றுத் திறமையாகப் பணியாற்றுகின்றனர்.

இந்த அளவுக்கு இத்துறைகளில் வளர்ச்சிபெற்றவர்கள் இருக்கும் போது, அவர்களைப் பயன்படுத்தி இலங்கைப்போக்குவரத்துச் சபை வீண் செலவையும் வீண் காலதாமதத்தையும் நீக்கலாம்.

யாழ்ப்பாணத்திலும் மாத்தறையிலும் பழுதடையும் பஸ்களைக் கொழும்புக்குக் கொண்டுபோவதை நிறுத்தி இ. போ. ச.பிராந்திய சபைகளின்கீழ் பஸ்கள் பழுதுபார்த்துத் திருத்திப் பராமரிக்கும் வேலைத்தலங்கள் நிறுவப்படுமென்று இ. போ. ச. மத்தியதலைவர் அறிவித்திருக்கிறார்.

விரைவில் இத்திட்டம் செயல்படுமென்று எதிர்பார்ப்போம். இதன்மூலம் பலருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்க வழி பிறப்பதுடன் பஸ்சேவையும் சீராகநடைபெறுவதற்கும் வாய்ப்பேற்படுமென்று நம்பலாம்.

# சிவபாதசுந்தரனாரின் —— சிறப்பான பணிகள்

வித்துவான் சி. ஆறுமுகம்

இலங்கை மணித்திருநாட்டில் நாவலர் பெருமானுக்குப் பின் சைவம் வளர்த்த தனிப் பெருந்தொண்டர் சைவப் பெரியார் சிவபாதசுந்தரனார், நாவலர்பெருமான் உயிருடன் இருக்கும் காலத்திலேயே பிறந்தவர். நாவலர் மறைவு 1879ஆம் ஆண்டு. நமது சைவப்பெரியார் தோற்றம் 1878ஆம் ஆண்டு. புலவர் ஒலியோயாதபுலோலிநகரமே சைவப் பெரியார் பிறந்த நகரம். தந்தையார் சுப்ரமண்யபிள்ளையும் தாயார் வள்ளியம்மையும் தவங்கிடந்து பெற்றெடுத்த நான்காவது குழந்தைதான் சிவபாதசுந்தரனார்.

### தமிழகம் சென்றார்

இளமையிற் சிவபாதசுந்தரனாரை அவரது மாமியாராகிய பார்வதியம்மையிடம் கல்வி பயில்வதற்கென தந்தை ஒப்படைத்தார். உயர்கல்விபயிலும் பொருட்டுத் தென்னிந்தியாவுக்குச் சென்றார். திருவனந்தபுரத்திலிருந்த சிறிய தந்தையாரான பேராசிரியர் கணபதிப்பிள்ளையுடன் வாழ்ந்து கல்விபயின்றார். மகாராசாக் கல்லூரியில் கல்வி பயின்றபின் பட்டப்படிப்பினை முடிக்கும் பொருட்டு திருச்சி செ.ன். யோசப் கல்லூரிக்குவந்தார். ஈராண்டுப் படிப்பை இனிதுமுடித்து விட்டுச் சென்னை சர்வகலாசாலை தந்த பி. ஏ. பட்டத்துடன் இருபதாவது வயதில் இலங்கைதிரும்பினார்.

### தொண்டரானார்

இவர் ஆங்கிலமும், தமிழும், தத்துவமும், தருக்கமும் கைவரப்பெற்ற நல்லறிஞர். சிறந்த சைவசித்தாந்தவித்தகராகவும் விளங்கினார். முதலில் புலோலியில் உள்ள சைவப்பர்டசாலையில் ஆசிரியப்பணி புரிந்து சட்டத்துறையிலும் புக விரும்பிய சைவப்பெரியார், திருக்கோணமலை செ.ன். யோசெப் கல்விக்கழகத்தின் அதிபராகப் பதவியேற்றார். கிறித்தவசூழ்நிலையே, இவரையும் சைவசமயத் தொண்டராகமாறச்செய்தது. இலத்தின் மொழி படித்துச் சட்டத்தரணியாக மாற வேண்டுமென்ற எண்ணம் சைவசமயத்தின்மீதுகொண்ட பற்றினால் மாறியது.

### குருவும் சீடரும்

யாழ்ப்பாணத்தின் சைவ நிலையைச் சிந்தித்த நாவலர் பெருமானைப் போன்றே, பெரியார் சிவபாதசுந்தரனாரும் தம்மைச் சில தொண்டினுக்கு அர்ப்பணஞ் செய்ய நினைந்து அதிபர் பதவியை உதறித்தள்ளிவிட்டு யாழ்ப்பாணம் திரும்பினார். அப்போது இவருக்கு வயது இருபத்தாறு. யாழ்ப்பாணம் வந்ததும் சுழிபுரம் செல்லப்பா அமைத்த விக்ரோரியாக் கல்லூரியின் துணையதிபராக அமர்ந்தார். அக்கல்லூரியையும் விட்டு நீங்கி புலோலி வேலாயுதம் பாடசாலை, மானிப்பாய் இந்துக்கல்லூரி என்பவற்றிலும் பணிபுரிந்தார். சேர். பொன் இராமநாதன் அவர்களும் பெரியார் சிவபாதசுந்தரனாரும் குருவும்சீடருமாக விளங்கினார்கள். இதன் பெரும்பயனாக ''சைவப்பிள்ளைகள் படிப்பதற்குச் சைவப்பாடசாலைகள் வேண்டும்'' என்ற நல்லெண்ணம் உருப்பெற்றது. அதன் பயனாக திருநெல்வேலியில் பரமேசுவராக்கல்லூரி எழுந்தது. இருவரின் இணைந்த உயர்ந்தஎண்ணம் இன்று யாழ் பல்கலைக்கழகமாக உயர்ந்து விட்டது.

### சைவப்பாடசாலைகள்

பரமேசுவரக் கல்லூரியில் துணையதிபராக அமர்ந்துபணி புரியும்போது மீண்டும் சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி இவரை நேசக்கரம் நீட்டியழைத்தது. தமது 36ஆம் வயதில் விக்ரோரியாக் கல்லூரியின் அதிபர் ஆனார். பெரியாரின் விக்ரோரியாக்கல்லூரி வாழ்வு, திருமணம் புரிந்தும் பிரமசாரியாக வாழும்வகையில் மாற்றம் தந்தது. இல்லறப் பிரமசாரியாக புலனடக்கி வாழ்ந்த புனிதரான சிவபாதசுந்தரனார், மூளாய் நகரில் உள்ள முருகன் மீது ஆராத பக்தி கொண்டு, பணிந்துவந்தார். அறிஞர் பலரின் நட்புங் கிடைத்தது. அயற்கிராமங்களிலும் சைவக்கல்லூரிகளும், பாடசாலைகளும்அமையவேண்

(5ம் பக்கம் பார்க்க)

# நல்லூர் 'சிவா'வின் 55-வது பிறந்த தினம்

ச. முருகரெத்தினம் ஜே.பி.

நல்லூர் சிவாவின் 55 வது பிறந்த தினம் இன்றாகும். தேக சுகத்துடன் நீடூழி வாழ்ந்து, அவர் தொடர்ந்து தமிழ் மக்களுக்கு அளப்பரிய சேவையாற்ற எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவானாக.



கரவெட்டியில், சைவமும் தமிழும் தழைத்தோங்கிய பரம்பரை பணியகாரர்களாகிய சிற்றம்பலம், பொன்னையா அகியோரின் குடும்பத்தில் 10-7-1923ம் திகதி சேர். பி இராமநாதனின் சேவையைத் தொடர்வதற்கெனச் சொல்லி வைத்தாங்கு, திரு. முருகேசு உடையாருக்கும் திருமதி சிவபாக்கியத்துக்கும் அருந்தவப் புதல்வராகப் பிறந்தார் சிவா.

வளரும் பயிரை முளையிற் தெரியும் என்றும் பெரியோர் வாக்கிற்கமைய, தனது சிறு பிராயத்திலேயே தமிழ்ப்பற்று சைவப்பற்று உடையவராய்த் தோற்றம் அளித்த இவர் ஆரம்பக் கல்வியைக் கரவெட்டியிலுள்ள விக்னேஸ்வராக் கல்லூரியிலும் பின் கொழும்பு மாநகரிலுள்ள 'ரோயல்' கல்லூரியிலும் முடிவில் இலங்கைச் சர்வகலா சாலையில் பி. ஏ. பட்டம் பெற்று சட்டக்கல்லூரியில் சட்டமும் பயின்று, முடிவிற் சிறந்த சட்டத்தரணியாகத் தனது தொழிலைக் கொழும்பு மாநகரில் மேற்கொண்டு பல சட்ட நுணுக்கங்களும், சட்டப் பிரச்னைகளும் உள்ள மிகச் சிக்கலான வழக்குகளில் தோன்றி வெற்றியீட்டினார்.

இவர் பொதுவுடமைக் கொள்கையிற் சிறுவயதிலிருந்தே கண்ரோட்டமுள்ளவராக இருந்து 1960ம் ஆண்டில் அரசியலிற் குதித்து, உடுப்பிட்டிப் பாராளுமன்ற உறுப்பினராக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி மூலம் தெரிவு செய்யப்பட்டார். பின்னர் 1965ம் ஆண்டு நடைபெற்ற பாரளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றார். பின்னர் பாராளுமன்றக் குழுவின் உபதலைவராகவும், உபசபாநாயகராகவும் சிறப்புறக் கடமை

[4-ம் பக்கம் பார்க்க]

# அடியவனுக்காக ஊஞ்சலாடிய வேலவர்

ஆசிரியமணி ஆர். ரி. சுப்பிரமணியம்
(துணைத்தலைவர், தென்மராட்சி சைவ மகாசபை)

இக்காலத்தில் சதிர்காம யாத்திரை மிகவும் இலகுவாக அமைந்துவிடுகிறது. ஆனால், அரை நூற்றாண்டுக்கு முன்னர் பிரயாணவசதி குறைவு. அதிகமான யாத்திரிகர்கள் பாதயாத்திரையாகவே கரைப் பாதையால் செல்வர். கனவிலோ, நேராகவோ கதிர்காம வேலவரின் அனுமதிபெற்றாலன்றி அடியார்கள் கதிர்காம யாத்திரையை மேற்கொள்ளத் துணியமாட்டார்கள். உத்தரவு பெற்றவர்களே பாதயாத்திரையை மேற்கொள்வர். இது அக்கால மரபு. இன்றேல் ஆபத்து நேரிடலாம்.

வடமாகாணத்து அடியவர்கள் பெரும்பாலும், வற்றாப்பளை அம்மன் பொங்கலுடன், முள்ளியவளை காட்டு விநாயகர் தரிசனம்முடித்து, தண்ணீரூற்று-குமுழமுனை - கொக்குத்தொடுவாய்-நாயாறு- அடம்பன்-புல்மோட்டை- குச்சவெளி-கன்னியா-மூதூர்-வெருகல் வழியாக நடந்து சித்தாண்டி முருகனையும் வணங்கிச் செல்வர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## மணிவாக்கு

நீராடுவதால் உடல் தூய்மையாகிறது. இறைவனைப் பற்றி எண்ணுவதால் உள்ளம் தூயதாகிறது.

--- லாரோஸ்

## நாடு நடப்பு

''புத்தகங்கள் பறிபோகின்றன!'' என்ற தலைப்புடன் ஒரு துண்டுப்பிரசுரம் திருநெல்வேலி யாழ் வளாக மாணவர் செயற்குழு என்ற கையொப்பத்துடன் வெளிவந்துள்ளது. அதில் சில பகுதிகளை இங்கு தருகிறேன்.

''தமிழ் மாணவர்களின் கல்வி உயர்ச்சியில் அக்கறை கொண்டுள்ள அனைவருக்கும், யாழ் வளாக மாணவர்களாகிய நாம் ஒரு முக்கியவிடயத்தை கவனத்திற்குகொண்டு வருகின்றோம். இந்தவிடயத்தில் நீங்கள் அனுதாபம் காட்டுவதைவிட உரிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்பதையே வலியுறுத்துகின்றோம்.

யாழ். வளாக மாணவர்களுக்கு ஏனைய வளாகங்களுக்கு இருக்கின்ற எந்த வசதியும் இதுவரைகாலமும் சரியானமுறையில் போதிய அளவில் கிடைக்கவில்லை. ஆயினும் யாழ் வளாக மாணவர்களின் உயர்கல்வித் தராதரம் ஏனைய வளாகங்களின் கல்வித் தராதரத்திற்கு சமமாகவும் சிலவேளைகளில் விஞ்சியதாகவும் அமைந்துவிட்டதற்கு ஒரேயொரு வசதியாக அமைந்திருந்தது பெருந்தொகையான நூல்களின் உதவியேயாகும்.

ஆனால் இதுவரைகாலமும் அமைதியாகப் பயன்படுத்தப்பட்டுவந்த இந்த நூல்கள் இப்பொழுது எதிர்பாராத விதமாக முக்கியதொரு பிரச்னைக்குள்ளாக்கப்பட்டுள்ளன. அதாவது, நூலகத்தில் உள்ள நூல்களின் முக்கிய பகுதி யாழ்ப்பாணக் கல்லூரியிலிருந்து சுவீகரிக்கப்பட்டவை. மற்றொரு பகுதி பல தமிழ்ப் பெரியார்களின் சேமிப்பிலிருந்து அன்பளிப்பாகப் பெறப்பட்டவை. அவற்றில் யாழ்ப்பாணக் கல்லூரியிலிருந்து சுவீகரிக்கப்பட்ட முப்பதினாயிரத்திற்கும் மேற்பட்ட முக்கியபகுதி நூல்கள் திருப்பிக்கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஏறத்தாழ மூவாயிரத்துக்கும் அதிகமான நூல்கள் நூலகத்திலிருந்து வெளியேற்றப்பட்டுவிட்டன. இந்த நடவடிக்கை யாழ் வளாகத் தமிழ்மாணவர்களின் கல்வியை ஈடுசெய்ய முடியாதபடி பாதிக்கும் ஒரு நடவடிக்கையாக அமைகிறது.

இலங்கையில் உள்ள ஒவ்வொரு வளாகமும் தனித்தனிப் பல்கலைக்கழகமாக மாற்றமடையவிருக்கும் இச்சூழ்நிலையில் இவ்வாறான நடவடிக்கைகள்மேற்கொள்ளுவது யாழ். வளாகத்தைப் பொறுத்தவரையில் வெறும் பெயர் மாற்றமாகவே அமையும். அவ்வாறன்றி யாழ் வளாகத்தின் நிலையை உயர்த்துவதாகவோ வசதிகளை அதிகரிப்பதாகவோ அமையுமென எதிர்பார்க்கமுடியாது. அது மட்டுமன்றி யாழ் வளாக மாணவர்களின் கல்வித்தரம் குறைவாக மதிப்பிடுகின்ற ஒரு நிலைமை ஏற்படுவதை எதிர்காலத்தில் நாம் எதிர்பார்க்கவேண்டியிருக்கும் என்பதைச் சகலரும் உணர்ந்து கொள்ளவேண்டும்.

யாழ்ப்பாணக் கல்லூரிப் பத்தகங்கள் சுவீகரிக்கப்பட்டபோது புத்தகங்கள் மட்டும் தான் சுவீகரிக்கப்பட்டன என்று யாரும் கூறிவிடமுடியாது. ஆனால் இன்று மற்றெல்லாவற்றையும் தவிர்த்து புத்தகங்களை மட்டும் தனியானபிரச்னையாக்கி அவற்றை மட்டும் திருப்பிக் கையளிக்கும் நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஃ ஃ ஃ

இதுபற்றி யாழ் வளாக வட்டாரங்களில் விசாரித்தேன்.

சுமார் இரண்டாயிரம் நூல்கள்தான் திருப்பிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவையும் வளாகத்துச்கு அதி முக்கியமற்றவையாம், வேறு

(5-ம் பக்கம் பார்க்க)

# ஆபிரிக்கா வல்லரசுகளின் பலப்பரீட்சைக் களமாக மாறுவதை அனுமதிக்கக் கூடாது

## ஐ. நா. பொதுச்செயலாளர் எச்சரிக்கை

காட்டூம், ஜூலை 19

''ஆபிரிக்கா வல்லரசு நாடுகளின் பலப்பரீட்சைக்களமாக மாறுவதை அனுமதிக்கக் கூடாது''

இவ்வாறு ஐ. நா. பொதுக் காரியதரிசி டாக்டர் குர்த் வால்ட்ஹெய்ம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

காட்டூமில் நேற்று ஆரம்பமான ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனத்தின் உச்சி மகாநாட்டில் பேசுகையிலேயே டாக்டர் வால்ட்ஹெய்ம் மேற்கண்டவாறு கூறினார்.

ஆபிரிக்க நாடுகள் தமக்கிடையேயான பிரச்னைகளை வெளிநாடுகளின் உதவியின்றி தாமே தீர்த்துக்கொள்ளவேண்டும் என்று டாக்டர் வால்ட்ஹெய்ம் கூறினார்.

ஆபிரிக்க நாடுகளை எதிர்நோக்கியுள்ள பல பிரச்னைகள் பற்றியும் இம்மகாநாட்டில் விரிவாக ஆராயப்பட்டு வருகிறது.

## பாண்டிச்சேரி நகரசபைத் தேர்தல்

புதுச்சேரி, ஜூலை 19

பாண்டிச்சேரியிலுள்ள நகரசபைகளுக்கான தேர்தல் இவ்வருடம் அக்டோபரில் நடைபெறும் என்று பாண்டிச்சேரி அரசு வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது.

பாண்டிச்சேரியில் 4 நகரசபைகள் உள்ளன. (இ)

## ஆறு உடைப்பெடுத்து 500 பேர் பலி

காட்மண்டு, ஜூலை 19

நேபாளத்தில் பாக்கி நதிக்கரை உடைப்பெடுத்ததை அடுத்து 500 பேர் நீரில் மூழ்கி இறந்துள்ளனர் என அறிவிக்கப்பட்டது.

இந்த உடைப்பு காரணமாக 20கிராமங்களும் ஒரு நகரமும் நீரில் அடித்துச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

2 ஆயிரம் வீடுகளும், 4 ஆயிரம் கால்நடைகளும் நீரில் அடித்துச் செல்லப்பட்டனவாம். (இ)

# குடும்பக்கட்டுப்பாடு மந்த கதியில் அமுல்

## இந்தியப் பிரதமர் கவலை

புதுடில்லி, ஜூலை 19

குடும்பக்கட்டுப்பாட்டுத்திட்டம் அமுல் மந்தகதியில் செயல்பட்டுவருகிறது என்றும் இத்திட்டத்தை உடன் தீவிரமாக அமுல்செய்ய நடவடிக்கை எடுக்கும்படியும் இந்தியப் பிரதமர் திரு மொரார்ஜிதேசாய் மாநில முதல் மந்திரிகளைக் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக முதல்மந்திரிகளுக்குப் பிரதமர் எழுதிய கடிதத்தில் மேலும் கூறியுள்ளதாவது:

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை தீவிரமாக அமுல் செய்யாவிடில் நாடு படுமோசமான பொருளாதார வீழ்ச்சியை எதிர்நோக்கவேண்டி ஏற்படும் இதற்குப் பொதுமக்களும் போதிய ஆதரவு அளிக்க வேண்டும். (இ)

## புதுடில்லியில் 700 பிரமுகர்களின்

# தொலைபேசி சம்பாஷணைகள் ஒற்றுக் கேட்கப்படுகின்றன

## எதிர்க்கட்சி எம். பி. புகார்

புதுடில்லி, ஜூலை 19

புதுடில்லியில் முன்னாள் அமைச்சர்கள் உட்பட 700 பிரமுகர்களின் தொலைபேசி சம்பாஷணைகள் ஒற்றுக்கேட்கப்பட்டுவருவதாக எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் புகார்செய்துள்ளார்.

எதிர்க்கட்சி உறுப்பினர் திரு. ஸ்ரீகாந்த்வர்மா லோகசபையில் நேற்று மேற்கண்ட புகாரைத் தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர்கள், பிரதிஅமைச்சர்கள், பத்திரிகையாளர்கள், தூதரக அதிகாரிகள் உட்பட 700 பிரமுகர்களின் தொலைபேசி சம்பாஷணைகளே ஒற்றுக்கேட்கப்படுகிறது என்றும் அவர் தமது புகாரில் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை பகுப்பாய்வு ஆராய்ச்சிப் பிரிவே இதற்குப் பொறுப்பாக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (இ)

மகாராஷ்டிர கூட்டரசு

# ஜனநாயக ரீதியில் ஆட்சி செலுத்தும்

## முதல்வருடன் 5 மந்திரிகள் பதவிஏற்பு

பம்பாய், ஜூலை 19

மகாராஷ்டிர மாநிலத்தில் பதவிஏற்றுள்ள புதிய கூட்டரசு ஜனநாயக பண்புகளைப் பேணிக்காக்கும் விதத்தில் ஆட்சி செலுத்தும் என்று கூட்டணியின் தலைவர் திரு. சரத் பவார் தெரிவித்துள்ளார்.

மகராஷ்டிரத்தில் புறக்கணிக்கப்பட்ட மக்களின் பிரச்னைகளைத் தீர்க்க தமது ஆதரவாளர்களின் உறுதுணையுடனும் உறுதியுடனும் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள இருப்பதாகவும் திரு. பவார் தெரிவித்தார்.

திரு. பவாரும் மற்றும் 5 அமைச்சர்களும் நேற்று கவர்னர் ஜனப் சாதிக்அலி முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டனர்.

### பவாருக்குப் பாராட்டு

இதேவேளையில், தக்க தருணத்தில் சமயோசித புத்தியுடனும் துணிவுடனும் காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேறி கூட்டரசாங்கத்தை அமைத்த திரு. பவாருக்கு ஜனதா கட்சி பொதுச்செயலாளர் திரு. நானாஜி தேஷ்முக் பாராட்டுத்தெரிவித்துள்ளார். (இ)

## பிரிவுபசாரம்

(யாழ்ப்பாணம்)

மயிலிட்டி அரச பொறியியல் கூட்டுஸ்தாபன ஸ்தல அதிபர் திரு. எஸ். சபாரத்தினம் பேலியகொடவுக்கு மாற்றலாகிச் செல்வதையிட்டு மயிலிட்டி அரசபொறியியல் கூட்டுஸ்தாபன மண்டபத்தில் இன்று மாலை பிரிவுபசாரம் நடைபெறவிருக்கிறது.

புதிய ஸ்தலப் பொறுப்பதிகாரி திரு. ஆர்.ஜெயசிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்வைபவத்தில் திரு. லலித் பெர்னன்டோ, திரு. எம். ஜெகநாதன், திரு. ஆர். நாகராசா, திரு. பொ.வேலாயுதபிள்ளை ஆகியோர் உரையாற்றுவர்.

## நல்லூர்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

யா[illegible]றி, பாராளுமன்ற உறுப்பினர்களதும் பொதுமக்களினதும் மதிப்பையும் பாராட்டுகளையும் பெற்றார்.

19[illegible]-ம் ஆண்டு தமிழர் கூட்[illegible]ணியை உருவாக்கிய முக்கிய தலைவர்களில் இவரும் ஒருவராவர். நல்லூர்த் தொகுதி எம். பியாக எதிர்த்கட்சி உப தலைவராகவும் கூட்டணியின் செயல் அதிபர்களில் ஒருவராகவுமிருந்து ஈற்றில் கூட்டணியின் ஏகோபித்த தலைவராகவும் வந்தமை அவரின் சிறந்த சேவையை எடுத்துக் காட்டுகிறது. தமிழ் மக்களின் முழு நம்பிக்கையைப் பெற்ற இவர் தனது அளப்பரிய சேவையைத் தொடர்[illegible]ம் ஆற்ற இறைவன் அருள் புரியவேண்டும்.

''ஜனதா நெருக்கடி காலத்தில்

# மந்திரிகள் மீது சரண்சிங் சுமத்திய குற்றச்சாட்டுகளை விசாரிக்க கமிஷன்''

## இந்திரா காங்கிரஸ் எம். பி. கோரிக்கை

புதுடில்லி, ஜூலை 19

அண்மையில் ஜனதா கட்சிக்குள் நெருக்கடி நிலவி வந்த காலத்தில் பிரதம மந்திரி மீதும் மற்றும் அமைச்சர்கள் மீதும் உள்துறை அமைச்சர் திரு. சரண்சிங் சுமத்தியிருந்த குற்றச்சாட்டுக்கள் மீது விசாரணை நடத்த கமிஷன் ஒன்று நியமிக்கப்படவேண்டும்.

இவ்வாறு இந்திராகாங்கிரஸ் லோகசபை உறுப்பினர் திரு. ராய் ஜனாதிபதி திரு. நீலன் சஞ்சீவ ரெட்டியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக இரு கடிதங்களை திரு. ராய், ஜனாதிபதிக்கும் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய்க்கும் அனுப்பியுள்ளார். (இ)

# அடியவனுக்காக

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

காட்டுப்பாதைகள் வனவிலங்குகள் நிறைந்திருப்பதை முன்னிட்டு அடியார்கள் கூட்டமாக சங்கு - சேமக்கலம் இவற்றுடன் முருகன் துதிப் பாடல்களைப்பாடிக்கொண்டே செல்வர். பயங்கர விலங்குகளும் இவர்களைத் தாக்குவதில்லை. வழியில் உள்ள தலங்களைத் தரிசித்தும், கந்த புராணபடனம் முதலியவற்றை மேற்கொண்டும் பக்தி சிரத்தையுடன் சென்றும் அடியவர்களைக் கதிர்காம வேலவர் கண்ணுங் கருத்துமாகக் காத்துவருவார்.

### புலவரும் புறப்பட்டார்

இத்தகைய யாத்திரைக் கோஷ்டி ஒன்றுடன் வடபகுதியிலுள்ள ஒருபுலவரும் ஒருமுறை சென்றார். அவர் கதிர்காம வேலவர்மீது ஊஞ்சற் பாக்களைப்பாடி அவற்றைக் கதிர்காமத் தீர்த்தம் முடிய நடைபெறும் ஊஞ்சலின் போது நாதஸ்வர இசையுடன், தானே பாடவேண்டுமென்ற பிடிவாதமுடையவராக இருந்தார்.

சித்தாண்டி முருகனாலயத்தை அடைந்த அடியார்கள், ஒருதினம் ஆறிய பின்பு, மாமாங்கப்பிள்ளையார் கோயில் வழியாக மேலும் புதுத்தென்புடன் நடந்தனர், மறுநாள் மதிய உணவு முடித்து மரநிழலில் சற்றே அனைவரும் அயர்ந்தனர். பின் சுமார் நாலு மணியளவில் எழுந்து யாத்திரையைத் தொடர்ந்தனர். ஆனால் குறித்த புலவர், மரத்தின் மறைவில் படுத்திருந்தாற்போலும் மற்றவர்கள் அவதானிக்கவில்லை. இவர் துயில் விட்டெழுந்ததும் தனது சகாக்களைக் காணாது, சஞ்சலமுற்றார். நன்றாக இருட்டியும் விட்டது. பாதை ஒடுக்கமாகவும், இருள் நிறைந்ததாகவும் இருந்தபடியால் முள்ளுங் கல்லுஞ்சேர்ந்து கஷ்டத்தைக் கொடுத்தது. கரடிகள் கத்துவதும், பன்றிகள் குறுக்கே ஓடுவதும் கண்டு 'முருகா! முருகா!' என்று கதறினார். அழுதார், வெம்பினார், பயனில்லை. அந்த ஒற்றையடிப் பாதையும் தவறிவிட்டது. நேரமும் இரவு ஒன்பது மணியாகிவிட்டது. ஏக்கத்துடன் அடிமேல் அடிவைத்து அங்குமிங்கும் பார்த்து நடந்தார். ஐயோ! பாவம்! ஆனால் முருகன் கைவிடுவாரா? அப்போது சிறிது தூரத்தில் ஒரு விளக்கு வெளிச்சம் தெரிந்தது. ஆனந்தம் மேலிட முருகநாமத்தைக் கூறியபடி அவ்வெளிச்சத்தை நோக்கி காட்டைக் குறுக்கிட்டுச் சிரமத்துடன் அணுகினார். ஈற்றில் அவ்வெளிச்சம் ஒரு சிறிய சேனைக் கொட்டிலில் இருப்பது தெரிந்தது. கிட்ட நெருங்கினார். ஒரு சிறிய கொட்டில் இரண்டாக அடைக்கப்பட்டிருந்தது. வாசலில் ஒரு மண்குடத்தில் தண்ணீர். முன்னறையில் ஒதுக்கமான இடத்தில் அந்தவெளிச்சம். மறுபகுதியில் ஓர் அட்டாளை போன்று காட்டுத்தடியால் தயாரிக்கப்பட்ட படுக்கை. அதுகாட்டுக்கொடியால் நடுமுகட்டில் கட்டப்பட்டிருந்தது. அது அசல் ஆடுகட்டிலாகஆட அதிலொரு முதியவர் படுத்திருந்தார். பக்கத்தில் ஒரு பெண். பதினைந்து வயதிருக்கலாம். நின்றுகொண்டிருந்தாள்.

### கிழவரின் உபசரிப்பு

''ஐயா! சரைப்பாதையால் கால்நடையாகக் கதிர்காமம் போகவந்தேன் கூடிவந்தவர் ச[illegible]த் தவறவிட்டுத் தவிக்கின்றேன். அடியேன் இன்றிரவு இங்கு தங்கி விடியப்போய்விடுகிறேன் தயவுசெய்து அனுமதி தரவும்!' இதுபுலவரின்வேண்டுகோள்.

''எங்களுக்கென்னப்பா! நல்லாய்த் தங்கிவிட்டுப்போ. வெளிச்சமிருக்கு. பானைக்குள் தண்ணீரிருக்கு பக்கத்தில் துரவும் உண்டு. ஏதாவது தேவையானால் கேள்''--இது கிழவனாரின் அன்பான விடை. புலவருக்குப் பெரிய புளுகு.

ஏதோ தன்னிடம் தயாராகவுள்ள வறுத்த அரிசி மாவுடன் தண்ணீரும்விட்டுப் பிசைந்து சுருக்கமாக இரவுணவை முடித்துக்கொண்டு நிலத்தில் படுத்தார். நித்திரை வருவதாக இல்லை. கிழவனாரின் தூக்கமுங் குலைந்துவிட்டது. 'ஐயா! நானொரு புலவர். கதிர்காம வேலவரின் மேல் ஊஞ்சற் பாக்கள் பாடிக்கொண்டு வந்திருக்கிறேன். நித்திரையும் வராதபடியால் அதைப்படித்தால் பாடமாகிவிடும். கோயிலில் தீர்த்தம் முடியப் படிக்கவேண்டும். இந்த விளக்கை எடுத்து எனக்குக்கிட்ட வைத்துக்கொண்டு படிக்கட்டுமா?'' என்று யாரும் இரங்கக்கூடிய வகையில் கட்டிலில் ஆடும் கிழவரைக் கேட்டார் புலவர்.

### ஊஞ்சற் பாட்டு

''கதிர்காம வேலவரைப் பற்றி ஊஞ்சற்பாட்டா? நல்லாய்ப்படி. உரத்துப்படியப்பா பயப்படாதே. நாங்களும் கேட்போம்'' இந்தவிடை புலவருக்கு உற்சாகத்தைக் கொடுத்தது. ''கதிர்காமவேலவரே! கானகத்து வள்ளியோடு ஆடீரூஞ்சல்'' என்று முடியும் பல்பாடல்களைப் பாடியபடியே புலவரும், மற்றையோரும் உறங்கிவிட்டனர். விடிந்துவிட்டது. கொட்டிலில் கிடந்த முதியவரையோ-அந்தப் பெண்ணையோ காணவில்லை. புலவர் அவசரஅவசரமாகத் தன்கடன்களை முடித்துக்கொண்டு 'நான் போய்வருகிறேன்' என்று அங்குமிங்கும் பார்த்து மூன்று முறை சொல்லிவிட்டுப் புறப்பட்டார்.

சேனைச் செய்கையிலிருந்து புறப்பட்ட ஒற்றையடிப் பாதை நல்ல ஒரு தெருவில் கொண்டு சென்றுவிட்டது. தன்னைவிட்டுச்சென்ற சகாக்களுக்கு முன்பே புலவர் கதிர்காமத்தை அடைந்தார். மலை தரிசனம் இவற்றையெல்லாம் முறைப்படி முடித்தார். மறுநாள் தீர்த்தம். ஆகவே தனது ஊஞ்சற்பாட்டு ஓலைச்சுவடியை எடுத்துக்கொண்டு கப்புறாளையிடம் போனார். தன் வரலாறு கூறி, ''இப்பாடலை நாளையதினம் ஊஞ்சல்நேரம் நான் படிக்க வேண்டிய ஒரு நேர்த்திக்கடனுடன் வந்துள்ளேன்'' என்றார் புலவர்.

### வேலவன் காட்சி

அப்போது கப்புறாளை ''அடடா! நீயா அந்தப்புலவன்? நீ பெரிய அதிட்டசாலியடா! இங்கே எல்லாம், அப்படி ஊஞ்சற்பாட்டுப் படிப்பதில்லை. அதுதானே உனக்காக அன்றிரவு சேனைச்செய்கையில் கொட்டில் போட்டு, உன்னை அழைத்து, நீ படிக்க அவர் ஆடுகட்டிலில் கிடந்து ஆட, வள்ளிநாயகியார் ஊஞ்சலை ஆட்டினாராமே; நீயே பக்திமான். உனக்காக இவ்வளவு பாட்டையும் அவர் பட்டு உனது பாட்டைக் கேட்டு நேர்த்திக்கடனை அன்றே முடித்துவிட்டாராமே. போ! போ!!'' என்று கூறி ஆனந்தச்சிரிப்புச் சிரித்தார்.

புலவர் திகிலடைந்தார். ஆச்சரியப்பட்டார். அடியற்ற மரம்போல் வீழ்ந்தார். ''இந்த ஏழைக்கு இப்படி இரங்கிய வேலவரே! வள்ளிநாயகியாரும், தாங்களும்தான் சேனைச் செய்கையில் எனக்குக்காட்சி அளித்தது என்பதைமுன்னமே அறிந்திருந்தால், கொட்டிலைச் சுற்றிவந்து உங்கள் பாதத்தில் விழுந்திருப்பேனே. திருமலரடிகளில் தொட்டுவணங்கியிருப்பேனே'' என்று பலபல சொல்லி ஆனந்தக் கண்ணீர் விட்டார். என்னே! மெய்யடியார் மாட்டுகந்தன் கருணை இருந்தவாறு.

# யாழ். மகளிர் கல்லூரி-- விளையாட்டுப்போட்டியில் 9 புதிய சாதனைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மகளிர் கல்லூரிகளின் 21வது விளையாட்டுப் போட்டியில் வேம்படி மகளிர் கல்லூரி 301 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும் 266 புள்ளிகளைப் பெற்ற யாழ். இந்து மகளிர்கல்லூரி இரண்டாம் இடத்தையும் 207 புள்ளிகளைப் பெற்ற சுண்டிக்குளி மகளிர்கல்லூரி மூன்றும் இடத்தையும் சுவீகரித்துக்கொண்டன.

பல ஆண்டுகளாக வேம்படி சுண்டிக்குளி மகளிர்கல்லூரிகளே முதலாம் இரண்டாம் இடங்களைப் பெற்றுவந்தன. இம்முறை இந்துமகளிர் கல்லூரி இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியில் கலந்து கொண்ட மற்றும் மானிப்பாய் மகளிர் கல்லூரி 90 புள்ளிகளையும் மகாஜனக் கல்லூரி 41 புள்ளிகளையும் மெதடிஸ்த மகளிர்கல்லூரி 39 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன.

## புதிய சாதனைகள்

இப் போட்டியில் 9 புதிய சாதனைகளும் நிலைநாட்டப் பட்டுள்ளன. அவற்றின் விபரம் வருமாறு:

100 மீட்டர் ஓட்டம்- 15 வயதுக்கு கீழ்: கே. ஜெயானந்தகுமாரி (இந்துமகளிர்) 14.0 செக்கன், 17 வயதுக்கு கீழ்: ஆர். துஷ்யந்தி (வேம்படி)- 13.8 செக்கன், 19 வயதுககுக் கீழ்: ஏ. செல்வகௌரி (சுண்டிக்குளி) 13.3 செக்கன்.

100 மீட்டர் தடைதாண்டி ஓடுதல்- 19 வயதுக்கு கீழ்: ஏ. செல்வகௌரி (சுண்டிக் குளி) 16, 5 செக்கன்.

200 மீட்டர் ஓட்டம்- 15 வயதுக்குக் கீழ்: கே. ஜெயானந்ததகுமாரி (இந்துமகளிர்) 29. 4 செக்கன்.

பரிதிவட்டம் எறிதல்- 19 வயதுக்கு கீழ்: ரி. கலாஜினி (இந்துமகளிர்) 88 அடி 6 அங்குலம். 15 வயதுக்கு கீழ்- கே. அருணா (மானிப்பாய் மகளிர்) 68 அடி 2 1/2 அங்குலம்.

குண்டுஎறிதல்- 13 வயதுக்கு கீழ்:ரி. கீதா (வேம்படி) 21 அடி 2 அங்குலம்.

ஈட்டி எறிதல்- 17 வயதுக்கு கீழ்: கே. செல்வஜோதி (வேம்படி) 79 அடி 2 1/2 அங்குலம்.

பிரிவு சாம்பியன்கள் விபரம்:

19 வயதுக்கு கீழ்: இந்து மகளிர்: 103 புள்ளிகள்.

17 வயதுக்கு கீழ்- வேம்படி மகளிர்: 132 புள்ளிகள்.

15 வயதுக்கு கீழ்- மானிப்பாய் மகளிர்; 83 புள்ளிகள்.

13 வயதுக்கு கீழ்- வேம்படி மகளிர்: 93 புள்ளிகள்.

### சாம்பியன்கள்

13 வயதுக்கு கீழ்ப்பிரிவு சாம்பியன்- எஸ். சிவஞானம் (வேம்படி மகளிர்).

15 வயதுக்கு கீழ்ப்பிரிவு சாம்பியன்- கே. ஜெயானந்த குமாரி (இந்துமகளிர்)

17 வயதுக்கு கீழ்ப்பிரிவு சாம்பியன்- கே. செல்வ ஜோதி (வேம்படி).

19 வயதுக்கு கீழ்ப்பிரிவு சாம்பியன்- ரி. கலாஜினி (இந்து மகளிர்).

### சிறந்த வீராங்கனைகள்

சிறந்த வீராங்கனைகளுக்கான பரிசுபெறுபவர்கள்: 19 வயதுக்குக் கீழ்- சுவடுப் போட்டிகள்: ஏ. செல்வகௌரி(சுண்டிக்குளி). மைதானப் போட்டிகள்- ஆர். ஞெசிற்ரு (சுண்டிக்குளி). 17 வயதுக்கு கீழ் சுவடுப் போட்டிகள்- ஆர். துஷ்யந்தி (வேம்படி). மைதானப் போட்டிகள்- பி. ஆனந்தலக்ஷ்மி (இந்துமகளிர்). 15 வயதுக்கு கீழ்- சுவடுப் போட்டிகள்: கே. ஜெயானந்தகுமாரி (இந்துமகளிர்). மைதானப்போட்டிகள்- வி. விவியன் (மானிப்பாய்மகளிர்) 13 வயதுக்கு கீழ்- சுவடுப் போட்டிகள்: என். ஸ்ரீஜனனி (சுண்டிக்குளி). மைதானப் போட்டிகள்: ஏ. கேஷனி (வேம்படி). [இ]

## தீ மிதிப்பு

(நெல்லியடி)

கரவெட்டி மேற்கு முங்கொடை முருகமூர்த்தி ஆலயத்தில் சென்ற சனிக்கிழமை தீமிதிப்பு வைபவம் நடைபெற்றது சிறுவர்கள் முதல் வயோதிபர் ஈறுக தீமிதித்தனர். பின்பு வைரவர் பொங்கல் உற்சவம் நடைபெற்றது.

## நாடும் நடப்பும்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பல நூல்கள் புகைப்படப் பிரதியாக எடுக்கப்படவிருக்கின்றன.

வளாகத் தலைமை, மாணவருக்குத் தேவையான நூல்களைக் கைவிட்டுவிடுமென்று நான் நினைக்கவில்லை.

## தேவரையாளி இந்துக் கல்லூரியில் உயர் வகுப்புக்கள்

(நெல்லியடி).

யாழ். தேவரையாளி இந்துக் கல்லூரியில் விரைவில் க. பொ. த. உயர்தர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்கான உத்தரவு கல்விஅமைச்சின் பணிப்பாளரால் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

உடுப்பிட்டித் தொகுதி தேசிய அரசுப் பேரவை உறுப்பினரின் தீவிர முயற்சி காரணமாகவே இவ்வுயர் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இப்பாடசாலையில் நிலவும் தண்ணீர் தட்டுப்பாட்டைநீக்க கல்வியமைச்சு 10,000ரூபாவை ஒதுக்கியுள்ளதாகத் தெரியவருகின்றது.

## மகாஜனவில் மரம்நடும் இயக்கம்

(மாவிட்டபுரம்)

அகில இலங்கை ரீதியாகக் கொண்டாடப்படும் மரம் நாட்டும் இயக்கத்தை முன்னிட்டு தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் இம்மாதம் 22ம் திகதி மரம்நாட்டும் இயக்கம் மேற்கொள்ளப்படவுள்ளது. கல்லூரி வளவினுள் பயன்தரு மரங்களை நாட்டும் இவ்வியக்கத்தை வடமாநில கல்வியதிபதி திரு. ரி. மாணிக்கவாசகர் ஆரம்பித்துவைப்பார். கல்லூரி அதிபர் திரு. பொ. கனகசபாபதி தலைமையில் ஆசிரியர்கள், மாணவர்கள் இவ்வியக்கத்தில் ஈடுபடுவார்கள். (உ)

## சிவபாதசுந்தரனாரின் . . . .

(3ம் பக்கத் தொடர்ச்சி)

என்று தூண்டினர். தொல்புரத்திலும் பண்ணைகத்திலும் வட்டுக்கோட்டையிலும் பாடசாலைகள் எழுந்தன.

### சமய நூல்கள்

அன்றியும் கல்லூரிகளிலும் பாடசாலைகளிலும் சமயம் போதிப்பதற்கு ஏற்ற நூல்களும் எழுத விரும்பினர். சைவபோதம் உருப்பெற்றது; திருவருட்பயன் உரையும் வெளிவந்தது. கந்தபுராண விளக்கமும் தோன்றியது. ஆசிரியர்களின் நலன்கருதி அகநூல், படிப்பித்தலின் விதியும் முறையும் என்னும் அரும்பெரும் நூல்கள் பெரியாரால் எழுதப்பட்டன. அறநிலையங்களின் சொத்துப் பரிபாலனம் பற்றி அரசாங்கம் சட்டமியற்றியபோது முறைப்பாடுகளைக் கேட்பதும் அவற்றுக்கான பரிகாரம் தேடுவதும் மட்டுமே அரசாங்கத்தின் கடமை' வேறு எதனையும் புரியக்கூடாது என்று ஆணித்தரமாகக் கருத்துத் தெரிவித்தவர் இவரே.

### புலாலுண்ணல்

கருணையுள்ளம் படைத்த சிவபாதசுந்தரனார் புலாலுண்ணலைத் தடுத்தற்குப் பெரிதும் பாடுபட்டார். வெற்றியுங் கண்டார். கல்வி நலன் கருதி இலங்கை அரசாங்கம் 19 0ம் ஆண்டு ஓர் ஆய்வுக் குழுவினை அமைத்த போது அக் குழுவில் இடம்பெற்று அரிய கல்விக் கருத்துக்களை வழங்கினர்.

ஈழத்துத் தமிழர் நலன் கருதியும் சைவத்தின் உயர்வு கருதியும் பாடுபட்ட பெரியார் சிவபாதசுந்தரனார், இறுதிக்காலத்தில் சிதம்பர நடேசர் தரிசனமே முத்தி தருவது என்று தெளிந்து வழிபட்டார். அந்நாளில் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் 'புராணங்களின் அருமையும் பெருமையும்' என்ற தலைப்பில் அரியவிரிவுரையொன்று நிகழ்த்தினர்.

### ஆங்கில நூல்

ஆங்கிலம்பேசும் அறிவுலகம் சைவசித்தாந்த உண்மையை உணரும்பொருட்டு இவர் ஆங்கிலத்தில் எழுதிய நூல் ''இந்துமதத்தில் சைவசித்தாந்தம்' என்பது இஃது இணையற்ற ஒரு சிறந்த நூல். 1953ம் ஆண்டில் 'சைவத்தின் மேன்மை' என்ற ஆங்கில நூலையும் எழுதி அச்சிட்டுக் கொண்டிருக்கும் போதே, அவ்வாண்டு ஆகஸ்ட் 14ம் நாள் மனைவி திலகவதியார் அருகிருந்து ஆண்டவன் மீது துதிபாட அன்பர் வி. நடராசர் ஐந்தெழுத்தோத இறைவன்திருவடி எய்தினர். ''தொண்டர் வாழ்வு தூய சிறந்த வாழ்வு, பூரண வாழ்வு''. நமது சைவப்பெரியார் வாழ்வும் இத்தகையதே.

## இன்று குருபூர்ணிமா தினம்

(யாழ்ப்பாணம்)

இன்று மாலை 6-30 மணிக்கு நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் குருபூர்ணிமா தினம் கொண்டாடப்படுகின்றது.

விழாவில் நல்லை ஆதீன கர்த்தா ஸ்ரீலஸ்ரீ பரமாசாரிய சுவாமிகள், நாகவிகாரைப் பிரதம குரு. வண. கே. மங்களஸ்ரீ தேரோ, யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி ஜனப் எம். எம். அப்துல்காதர், யாழ். அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னாண்டோ, நல்லூர் தேவாலயத்தைச் சேர்ந்த வண. ஜே. சர்வானந்தன் ஆகியோர் உரை நிகழ்த்துவர். (இ)

● ● ●

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய, பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா நிலையத்தினரின் ஆதரவில் குருபூர்ணிமா தினம் கொண்டாடப்படும்.

ரசிக ரஞ்சனசபா மண்டபத்தில் இன்று மாலை நிகழ்ச்சிகள் மங்கள இசையுடன் ஆரம்பமாகும். சின்னமணி குழுவினரின் வில்லிசையும் மற்றும் பஜனை, தீபாராதனையும் நடைபெறும்.


Rio (Jaffna) Phone: 7607
Daily 4 Shows
2nd Glorious and Crowded Week
Peter Fonda, DIAMOND MERCENARIES

நாகம்ஸ் (சுன்னுகம்)
தினசரி 6-45, 10-00
எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா அசோகன்
ராமன் தேடிய சீதை

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
எம். ஜி. ஆர். - லதா
நினைத்ததை முடிப்பவன்
(புதிய பிரதி - கலர்)

சாந்தி யாழ். நகர் போன்: 7642
தினசரி 10-30, 2-30, 4-45, 7-00, 9-30,
Sidney James, Barbara Windsor
CARRY ON BEHIND (Comedy Film)
21-7-78 2 மணிக்கு மட்டும் நிதியுதவிக்காட்சி
ராமன் எத்தனை ராமனடி

REGAL Jaffna Daily at 4-45, 7- & 0 P. M. only
DEATH LAID AN EGG
(color - Spy Thriller)
From: 22-7-78 MAN ON THE MOON

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-சுஜாதா-சௌகார்ஜானகி-சுந்தரராஜன் நடித்த
பெரும் புகழும்

ராஜா (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்-ரஜனி-ஆலம் சுதா-வை.விஜயா நடித்த
மன்மத லீலை
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
நாகேஸ்வரராவ் — சாவித்திரி
மஞ்சள் மகிமை

லிடோ (யாழ்.நகர்) போன்: 7692
சிவகுமார், அல்கா
மதனமாளிகை

மனோகரா (யாழ்ப்பாணம்) (புத்தம் புதிய பிரதி)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - கே.ஆர்.விஜயா
விவசாயி

ராணி (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-மஞ்சுளா நடித்த
உத்தமன்
(ஈஸ்ட்மன் கலர்)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
கடைசி சில தினங்கள்
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் - லக்ஷ்மி - நாகேஷ் - மனோகர் நடித்த கே. பாலசந்தரின்
நூற்றுக்கு நூறு
(புதிய பிரதி)

# "அன்பின் அடிப்படையிலேயே கூட்டுறவை வளர்க்க வேண்டும்"

(நீர்வேலி)

"கூட்டுறவு, அன்பின் அடிப்படையிலேயே வளர்க்கப்படவேண்டும், அதுவே கூட்டுறவின் இலட்சியமுமாகும். பணிப்பாளர்களும், பணியாளர்களும் அன்பின் அடிப்படையிலேயே கூட்டுறவு இயக்கத்தை வளர்க்கவேண்டும்."

இவ்வாறு வலி-கிழக்கு தென்பகுதிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற சர்வதேசக் கூட்டுறவாளர் தின விழாவிற்குத் தலைமைவகித்துப் பேசிய மேற்படி சங்கத் தலைவர் திரு. வ. நடேசலிங்கம் குறிப்பிட்டார்.

வடபகுதிக் கூட்டுறவுத் தேசிய சபைக் காரியதரிசி திரு. கே. கணேசலிங்கம் பேசுகையில், கூட்டுறவு இயக்கம் மீண்டும் சுதந்திரமுள்ள இயக்கமாக இயங்கக்கூடிய அறிகுறிகள் தென்படுகின்றன என்று கூறினார்.

காரியாலயப் பரிசோதகர் திரு. எஸ். கிறிஸ்தோஸ்தம் பேசுகையில் கூட்டுறவில் யோக்கியம், முகமன்பாராமை, பகைமைபாராமை ஆகிய மூன்று முக்கிய கொள்கைகளைக் கடைப்பிடிக்கவேண்டும். அப்படியானால்தான் சங்கங்கள் வளர்ச்சியடையும் எனக் குறிப்பிட்டார்.

கோப்பாய் வடக்கு கிளைத் தலைவர் திரு. க. இ. குமாரசாமி பேசுகையில், மக்களின் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்வதற்காகவே ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சி குன்றிக்கொண்டே போகின்றது. இதற்கு அரசாங்கத் தலையீடே காரணமாகும் என்றும் இயக்கம் வளர்ச்சியடையவேண்டுமென்றும் கூறினார்.

புத்தூர் மக்கள் வங்கி முகாமையாளர் திரு. எஸ். சிதம்பரப்பிள்ளை பேசுகையில், கூட்டுறவுச் சங்கங்கள் தனியே விற்பனை நிலையங்களாக மட்டும் இயங்காது, பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களையும் நடாத்தவேண்டுமெனவும், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வேண்டிய கடன் உதவிகளை நல்கி ஊக்கமளிக்க மக்கள் வங்கி தயாராகவிருக்கிறது எனவும் குறிப்பிட்டார்.

கோப்பாய்ப் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி திரு. ஆர். செல்வக்குமார் பேசுகையில் கூட்டுறவுப் பணியாளர்கள் நம்பிக்கை உள்ளவர்களாகவும், நேர்மை உள்ளவர்களாகவும் இருக்கவேண்டுமெனக் கூறினார்.

நீர்வேலி தெற்குக் கிளைத் தலைவர் திரு. நீ. சி. முருகேசு பணியாளர் சங்கத் தலைவர் திரு. க. தர்மலிங்கம், மக்கள் பிரதிநிதி திரு. அ. சங்கரப்பிள்ளை உட்படப் பலர் பேசினர் மேற்படி தினத்தையொட்டி நடைபெற்ற போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு மேற்படி சங்கத்தின் முன்னைள் தலைவரும், மன்னார்ப் பகுதி உதவி அரசாங்க அதிபருமான திரு. கா. மாணிக்கவாசகர் பரிசில்களை வழங்கினார். (இ)

## சாதனை வாரம்

(யாழ்ப்பாணம்)

குருதேவர் சுவாமி சிவானந்த மகர்ஷி சமாதியடைந்த 15வது புண்ணிய திதியையொட்டி இன்று முதல் இம்மாதம் 28ந் திகதி வரை நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் சாதனை வாரம் கொண்டாடப்படும்.

தினமும் காலை 5 மணி முதல் 7 மணி வரை தியானம், பிரார்த்தனை, பஜனை ஆகியவையும், மாலை சொற்பொழிவுகளும், இன்னிசை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

## சுவீப்முடிவுகள்

(கொழும்பு)

நேற்றுமுன் தினம்ரத்தசமவில் இழுக்கப்பட்ட 671-வது இலக்க தேசிய லொத்தர் சுவீப் முடிவுகள் வருமாறு:

1-ம் பரிசு

13 G 08[illegible]0

ரூ. 1,00,000.00

2-ம் பரிசு

57 Q 0682

ரூ. 40,000.00

3-ம் பரிசு

26 Y 0434

ரூ. 10,000.00

தலா ரூ. 1,425.00 ஆறுதல் பரிசு பெறும் டிக்கட்டுகள் வருமாறு:

| | |
|---|---|
| 28 A 0066 | 03 A 0922 |
| 02 A 0219 | 01 A 0883 |
| 50 A 0992 | 15 B 0096 |
| 09 B 0989 | 50 B 0523 |
| 39 B 0482 | 04 B 0458 |
| 07 D 0486 | 07 D 0252 |

| | |
|---|---|
| 06 D 0283 | 27 D 0054 |
| 53 D 0128 | 25 D 0160 |
| 07 E 0537 | 39 E 0065 |
| 19 E 0056 | 06 E 0688 |
| 36 E 0569 | 57 E 0061 |
| 41 E 0587 | 42 F 0960 |
| 10 F 0175 | 37 F 0072 |
| 44 F 0451 | 46 G 0206 |
| 15 H 0585 | 26 H 0554 |
| 48 H 0547 | 09 H 0833 |
| 57 J 0627 | 13 J 0811 |
| 51 J 0982 | 53 J 0756 |
| 21 J 0040 | 47 J 0862 |
| 44 K 0901 | 59 K 0687 |
| 18 K 0263 | 26 K 0219 |
| 01 K 0805 | 02 K 0958 |
| 17 L 0063 | 38 M 0961 |
| 19 M 0875 | 16 M 0122 |
| 41 N 0737 | 36 N 0576 |
| 50 N 0412 | 28 O 0596 |
| 15 P 0139 | 02 P 0931 |
| 07 P [illegible] | 47 P 0667 |
| 33 Q 0737 | 11 Q 0488 |
| 03 Q 0256 | 13 Q 0863 |
| 29 R 0025 | 01 R 0008 |
| 60 S 0028 | 27 S 0683 |
| 13 S 0882 | 23 S 0531 |
| 12 S 0601 | 52 S 0152 |
| 12 T 0654 | 09 T 0504 |
| 54 T 0415 | 36 T 0459 |
| 14 T 0290 | 58 U 0543 |
| 19 U 0799 | 03 U 0407 |
| 23 U 0436 | 20 U 0629 |
| 54 U 0395 | 43 U 0729 |
| 06 V 0070 | 27 V 0158 |
| 41 V 0074 | 07 V 0973 |
| 07 V 0123 | 33 W 0257 |
| 27 W 0263 | 53 W 0157 |
| 01 X 0154 | 14 X 0277 |
| 58 Y 0317 | 07 Y 0058 |
| 10 Y 0034 | 30 Y 0216 |
| 11 Z 0100 | 07 Z 0609 |
| 25 Z 0313 | 53 Z 0342 |
| 41 Z 0012 | |

[இவையாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்]

### மதுரை மாநகராட்சித் தேர்தல்:

# கட்சிகள் பலப்பரீட்சை, தலைவர்கள் நகரில் முகாம்

சென்னை, ஜூலை 19

எதிர்வரும் 26-ம் திகதி நடைபெறவிருக்கும் மதுரை மாநகர தேர்தல் தமிழ்நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

அரசியல் கட்சிகள் இதை ஒரு பலப்பரீட்சையாகப் பயன்படுத்த விருப்பதால் மக்கள் கவனத்தை இது பெரிதும் ஈர்த்துவருகிறது.

மதுரை மாநகரத்தின் 65 வட்டாரங்களுக்கான தேர்தலில் 426 பேர் போட்டியிடுகின்றனர். இவர்களில் 74 பேர் பெண்கள், 29 பேர் பழைய உறுப்பினர்கள்.

அரசியல் கட்சிகள் 4 அணிகளாக நின்று இப்போட்டியில் ஈடுபடுகின்றனர்.

அனைத்திந்திய அண்ணா தி. மு. கழகத்தின் தலைமையில் ஓர் அணியும், திராவிடமுன்னேற்றக்கழகத்தின் தலைமையில் ஓர் அணியும், இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைமையில் ஓர் அணியும் இதில் போட்டியிடுகின்றன. ஜனதா கட்சி தனித்துநின்று போட்டியிடுகின்றது. இந்திய காங்கிரஸ், காமராஜ் காங்கிரஸ் ஆகியனவயும் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளன.

அ. இ. தி. மு. க. 47 இடங்களிலும், தி. மு. க. 53 இடங்களிலும். இந்திரா காங்கிரஸ் 56 இடங்களிலும், ஜனதா கட்சி 48 இடங்களிலும் போட்டியிடுகின்றன.

தேர்தல் பிரசாரங்கள் அதிதீவிரமடைந்துள்ளன. கட்சிகளின் முக்கிய தலைவர்கள் மதுரையில் முகாமிட்டு பிரசாரவேலைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தவாரத்தில் அ. இ. தி. மு. கழகப் பொதுச்செயலாளர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனும், தி. மு. கழகத் தலைவர் திரு. மு. கருணாநிதியும், இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் திருமதி இந்திராகாந்தியும் மதுரைக்கு விஜயம் செய்து பிரசாரங்களில் ஈடுபடவிருக்கின்றனர். ஜனதா கட்சித் தலைவர் திரு. பி. ராமச்சந்திரனும் மதுரை வர இருக்கிறார்.

27-ம் திகதி முடிவுகள் அறிவிக்கப்பட்டுவிடும். 29ம் திகதி அல்லது 30ம் திகதி மேயர் தெரிவு நடைபெறும்.

இத்தேர்தலை அசம்பாவிதங்களெதுவுமின்றி நடத்தி முடிக்க பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பிறமாவட்டங்களிலிருந்தும் ஏராளமான பொலிசார் மதுரைக்குப் வந்துள்ளனர்.

## ஆஸி, எம்.பிக்கள் குழு - அமிர் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கை அரசின் அழைப்பை ஏற்று இன்று கொழும்பு வரும் ஆஸ்திரேலிய பாராளுமன்றப் பிரதிநிதிகள் குழு நாளை ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் உட்பட பல அரசியல் தலைவர்களையும் வர்த்தக நிறுவனப் பிரமுகர்களையும் சந்தித்து உரையாடுவர்.

நாளைக்காலை 10 மணிக்கு ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவையும், மாலை 3 மணிக்கு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்தையும், மாலை 4 மணிக்குபிரதமரையும் இக்குழு சந்தித்து உரையாடும். (ம-இ)

## ஆஸி. குழுவுக்கு திருக்குறள் அன்பளிப்பு

சென்னை, ஜூலை 19

இந்தியாவுக்கு விஜயம்செய்துள்ள ஆஸ்திரேலிய ஆட்சிமன்ற உறுப்பினர் குழுவினருக்கு தமிழ்நாடு ஆளுநர் திரு. பிரபுதாஸ் பட்வாரி திருக்குறள் பிரதிகளையும் திருவள்ளுவரின் உருவச்சிலைகளையும் அன்பளிப்புச் செய்தார்.

இந்திய கலாசாரத்தை குறிப்பாக தமிழ்நாட்டின் பாரம்பரிய கலாசாரத்தையும் சிலைகளையும் பற்றி அவர்களுக்கு ஆளுநர் விளக்கினார்.

தமிழ்நாட்டிலுள்ள கோயில்கள், புராதன கலைப்பொக்கிஷங்கள் என்றும் அவைகளில் ஒன்றையாகிலும் சென்றுபார்க்கும்படியும் ஆஸ்திரேலிய குழுவினரிடம் ஆளுநர் கூறினார்.

இந்திய கலைகளும் கலாச்சாரங்களும் தங்களைப் பெரிதும் கவர்ந்துள்ளதாக குழுவினர் தெரிவித்தனர்.

## கார்ட்டரின் ரஷ்ய எதிர் நடவடிக்கை

நியூயோர்க், ஜூலை 19

சோவியத் யூனியனுக்கு நவீன கம்பியூட்டர் சாதனங்களை விற்பனை செய்வதில்லையென அமெரிக்க அதிபர் திரு. கார்ட்டர் தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகிறது,

## நல்லூர்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வது தமிழர் விடுதலைக்கூட்டணிக் காரியாலயங்களில் அமரர்களாகிய தமிழ்த் தலைவர், தந்தைசெல்வாவுக்கும், ஜி. ஜி. பொன்னம்பலத்துக்கும் உருவப்படங்களை ஒன்றாகதிறப்பதில் நல்லூர்த்தொகுதியே முன்நிற்கின்றது. இந்த ஒற்றுமை ஆவரங்காலில்நடைபெறும் தமிழர் விடுதலைக் கூட்டணியில் 2வது தேசிய மாநாட்டில்எடுக்கவிருக்கும் தீர்மானத்தில் தங்கியுள்ளது.

வவனியாவில் நடைபெற்ற பொதுச்சபைக் கூட்டத்தில் திரு. அமிர்தலிங்கம் என்னிடம் கூறிய கூற்று என்னைத் தலைகுனிய வைத்தது. ஏனென்றால், பொதுச்சபையில் நல்லூர்த்தொகுதியில் இருந்துதான் குறைந்த உறுப்பினர்கள் வந்துள்ளனர் என்று அவர் கூறினார். இக்குறையை இளைஞர்கள் தீர்த்துவைக்க வேண்டும் என்றார்.

யாழ்ப்பாண எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் பேசுகையில், ஐ. தே. கட்சி அரசானாலும் சரி, ஸ்ரீ ல. சு. கட்சி அரசானாலும சரி தமிழ்பேசும் மக்களை மையமாக வைத்து வகுப்புவாதத்தை விதைத்தே அரசியல் லாபம் தேடுகின்றனர். இதற்கு தமிழ்மக்கள் பலியாகக்கூடாது என்றார்.

### முழுநேர உழைப்பு

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பேசுகையில், தமிழ்த்தலைவர்களைப் பொறுத்தவரையில் தமிழ்மக்களின் விடுதலைக்கு பகுதிநேர உழைப்பாளிகளாக [illegible]மல் முழுநேர உழைப்பாளிகளாக மாற வேண்டும். இதற்கு கோப்பாய்க் கோமகன் வன்னியசிங்கத்தின் ஜென்ம பூமியில் நடைபெறும் மாநாடு வழிசமைக்க வேண்டும் என்றார்.

விழாவுக்கு பெருந்திரளான கூட்டணிப் பிரமுகர்கள் கலந்துகொண்டனர் விழாவில் முன்னாள் மாவட்ட நீதிபதி திரு. எம். தம்பித்துரை, நல்லூர் மாவட்டக் கிளைச்செயலாளர் திரு. எஸ். கனகசபாபதி, வண்ணை ஆனந்தன் உப்பட பலர் உரையாற்றினர். (கெ)

## நன்றி

(நெல்லியடி)

அண்மையில் அரியாலைப்பகுதியில் இடம்பெற்ற கலவரங்களை சமாதானம் செய்து அமைதியை ஏற்படுத்திய பொலிஸ் அதிகாரிகளுக்கும் மற்றையோருக்கும் நன்றி தெரிவிக்கும்தீர்மானமொன்று கோப்பாயில் நடைபெற்ற அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபையின் நிறைவேற்றப்பட்டது.

## இந்திராவை விசாரிக்க தனி நீதிமன்றம்;

புதுடில்லி, ஜூலை 19

திருமதி இந்திராகாந்தி மீது விசாரணை நடத்துவதற்காக விசேஷ நீதிமன்றம் ஒன்றை ஏற்படுத்துவது பற்றி இந்திய அரசு ஆலோசித்துவருகிறது.

அரசியல் சட்டப் பிரிவுகளுக்கு இது முரண்படாமல் இருக்குமா என்பது சுப்ரீப் கோர்ட்டின் கருத்தைப் பெறவும் முயற்சி எடுக்கப்படுகின்றது. இத்தகவல் இன்று லோகசபையில் வெளியிடப்பட்டது,

# தென்மாநில முதல்வர்களின் அச்சத்துக்கு காரணமே இல்லை

## மத்திய அரசு கருத்து

புதுடில்லி, ஜூலை 19

ஆட்சிமொழி தொடர்பாக தென்மாநில முதலமைச்சர்கள் தெரிவித்துள்ள அச்சத்துக்கு முகாந்திரமே இல்லை என்று இந்திய உள்ஆட்சிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்திய லோகசபையில் வயலார் ரவி என்ற உறுப்பினர் கேட்ட கேள்வியொன்றுக்கு அரசதரப்பில் மேற்படி பதில் அளிக்கப்பட்டது.

இந்தி பேசாத மாநிலங்கள் விரும்பும் வரையில் ஆங்கிலத்திலேயே அலுவல்கள் நடைபெறுமென்ற நிலையில் மாற்றம் எதுவுமில்லை.

இந்தி பேசாத மாநிலங்கள் விரும்பினாலும், அது ஆட்சிமன்றத்தின இரு சபைகளிலும் நிறைவேற்றப்பட்டுள்ளதென்றும் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது,

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஜூலை மாதம் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

The Eelanaadu, Post Box N : 49, Jaffna - Telegram: Eelanaadu-Telephone: 389 - Registered as a Newspaper in Sri Lanka.